## IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 24 -04-2025

SC. 202/2022

அ.சா 5 – கோவிந்தராஜ்

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ம் நாள் **கோவிந்தராஜ்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தந்தை பெயர் | வெங்கடேஷ் |
| வயது | 38 | கிராமம் | ஆருப்பள்ளி |
| வட்டம் | சூளகிரி | **மாவட்டம்** | கிருஷ்ணகிரி |

முதல் விசாரணை : –

நான் தற்போது ஆருப்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது சீனிவாசனின் அப்பா கோவிந்தராஜ் எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு சீனிவாசனை யரோ வெட்டி விட்டார்கள் என்றும் , சென்று போய் பார்க்கும் படியும் என்னிடம் சொன்னார் , நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது நான் போவதற்குள் சீனிவாசனை மருத்துவமனைக்கு முரளி என்பவர் கொண்டு சென்றுள்ளார். மறுநாள் காலையில் காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். நான் உடன் இருந்தேன் என்னுடன் கேசவன் என்பவரும் , உடன் இருந்தார். போலிசார் சம்பவ இடத்தை படம் வரைந்தார்கள். அதற்கு நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் ,தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மதஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ 2** ஆகும் , போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சீனிவாசன் எனக்கு தம்பி உறவு முறை வேண்டும். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் கையொப்பம் செய்துள்ள தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததை தவிர என்னிடம் வாக்குமூலம் எதுவும் போலிசார் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே சீனிவாசனுக்கு திருமணம் நடந்திருந்தது என்றால் அது தெரியாது , ஆனால் ஒரு பெண்ணை கூட்டி கொண்டு வந்திருந்தார். நான் சீனிவாசனுக்கு நெருங்கிய உறவினர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்தேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 24 -04-2025

SC. 202/2022

அ.சா 4 – முரளி

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ம் நாள் முரளி என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முரளி | தந்தை பெயர் | கோவிந்தப்பா |
| வயது | 35 | கிராமம் | செம்பரசனப்பள்ளி |
| வட்டம் | சூளகிரி | **மாவட்டம்** | கிருஷ்ணகிரி |

முதல் விசாரணை : –

நான் தற்போது செம்பரசனப்பள்ளியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 11.02.2020 ம் தேதி இரவு 8.30 மணியளவில் நான் என் வீட்டில் இருந்தபோது சீனிவாசன் எனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு கார்த்தி என்பவர் தன்னை வெட்டிவிட்டதாக அழுது கொண்டே என்னிடம் சொன்னார் , நான் எனது காரை எடுத்துக் கொண்டு போய் அவரை விஜயா மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தேன். நான் பார்க்கும் போது சீனிவாசனுக்கு பின் கழுத்தில் வெட்டுக்காயம் இருந்தது. இரத்தம் வளிந்து துண்டால் கட்டப்பட்டிருந்தது. அவரை மருத்துவமனையில் சேர்த்த பின்பு சீனிவாசனின் அக்காவிற்கு போன் மூலம் தகவல் சொன்னேன். பின்பு அவரது அக்கா வந்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அங்கிருந்து சீனிவாசனை ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார். காயம் அதிகமாக இருந்ததால் பின்பு குணம் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். போலிசார் என்னை மறுநாள் எப்படி நடந்தது என்று விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எவ்வாறு சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்த போது வாக்குமூலம் டைப் செய்து பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் , போலிசார் நான் சொல்ல சொல்ல நடந்த விவரங்களை எழுதி கொண்டார்கள் என்றும், நான் அதில் கையொப்பம் செய்தேன் என்றும் சாட்சி சொல்கிறார். விஜயா மருத்துவமனையில் அனுமதித்த பின்பு வேறு எந்த மருத்துவமனைக்கும் நான் செல்லவில்லை என்றும் , ஓசூர் அரசு மருத்துவமனைக்கு நான் காரில் வந்தேன் என்கிறார். நான் குடியிருக்கும் கிராமத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லும் ஆருப்பள்ளி கிராமத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 1/2 கிலோ மீட்டர் இருக்கும் என்கிறார். நான் சீனிவாசனை அழைத்து சென்றதாக சொல்லும் காரின் பதிவு எண் மற்றும் உரிமையாளர் விவரத்தை போலிசார் விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொன்னேன் என்கிறார். அடிப்பட்ட சீனிவாசன் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் , சரிதான். யாரோ செய்த சம்பவத்திற்கு என் நண்பண் கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 24 -04-2025

SC. 202/2022

**அ.சா 3 – சுப்ரமணி**

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ம் நாள் **சுப்ரமணி** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **சுப்ரமணி** | தந்தை பெயர் | கிருஷ்ணராஜ் என்ற பெத்தன்னா |
| வயது | 38 | கிராமம் | மருள தேவன பள்ளி |
| வட்டம் | சூளகிரி | **மாவட்டம்** | கிருஷ்ணகிரி |

முதல் விசாரணை : –

நான் தற்போது ஆருப்பள்ளி அருகில் உள்ள மருள தேவன பள்ளியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 11.02.2020 ம் தேதி சீனிவாசன் என்பவர் அடிபட்டு கட்டிக்கொண்டு எனது வீட்டருகே வந்தார். நான் வீட்டினுள் தூங்கி கொண்டிருந்து சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். என் மனைவி மாசமாக இருந்தார் அவர் தன்னுடைய உடலில் துண்டு போட்டிருந்தார் அந்த துண்டை சீனிவாசன் கேட்டுள்ளார். எனது மனைவியும் கொடுத்துள்ளார் . என் அம்மா அவருக்கு தண்ணீர் கொடுத்தார். தண்ணீரை குடித்து விட்டு சீனிவாசன் அவருடைய ஊருக்கு சென்று விட்டார். அவ்வளவு தான் நடந்தது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை .

( சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்குமாறு அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியை அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 11.02.2020 அன்று இரவு 8.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது சீனிவாசனின் அலறல் சத்தம் கேட்டு நானும் என் அம்மாவும் ஓடி வந்து பார்த்தோம் என்றும் , அப்போது பைக்கில் வந்து கொண்டிருந்த சீனிவாசனை லஷ்மணன் மகன் கார்த்திக் அருவாளால் பின் கழுத்தில் ஓங்கி வெட்டியதும் இரத்த வெள்ளத்தில் கீழே விழுவதை நாங்கள் பார்த்தவுடம் , நாங்கள் ஓடி வருவதை பார்த்து கார்த்திக் கத்தி உடன் தப்பி சென்று விட்டார் என்றும் , நாங்கள் சீனிவாசன் செல்போனில் இருந்து முரளி என்பவரை தொடர்பு கொண்டு சீனிவாசனிடம் பேச வைத்தோம் என்றும் , பின்பு முரளி வந்து காயம் பட்ட சீனிவாசனை மருத்துவமனைக்கு காரில் அழைத்து சென்றார் எனவும் , இந்த சம்பவத்தை நானும் என் குடும்பமும் நேரில் பார்த்ததாகவும் சீனிவாசன் குடும்பபத்திற்கும் எதிரி கார்த்திக் குடும்பத்திற்கும் தகராறு இருந்தது எனக்கு தெரியும் என்றும் , போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மைணை மறைத்து எதிரிக்க ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur